
**9th தேர்வு**

**Marks : 300**
**Time : 3 Hrs**

# TARGETING TNPSC GROUP-II 2023

## QUESTION WITH SIMPLIFIED ANSWER

## MAINS WRITTEN EXAM




### தமிழ்நாடு, இந்தியா தொழில்வரைபடம் பணியாளர் தேர்வில் மாநில, மத்திய அரசின் பங்கு

| | | |
|---|---|---|
| 1. | **ராணிப்பேட்டை** | - தோல் |
| 2. | **ஆம்பூர்** | - தோல் |
| 3. | **வாணியம்பாடி** | - தோல் |
| 4. | **சேலம்** | - விசைத்தறி, கைத்தறி, ஜவுளி, எஃகு, மரவள்ளி |
| 5. | **சங்ககிரி** | - லாரி கலத்தொகுதி |
| 6. | **திருசெங்கோடு** | - ஆழ்துளையிடும் பணிகள் |
| 7. | **நாமக்கல்** | - போக்குவரத்து, கோழி பண்ணை |
| 8. | **கரூர்** | - வாகன புனைபவர், விசைத்தறி |
| 9. | **ஈரோடு** | - விசைத்தறி, மஞ்சள் |
| 10. | **கோயம்புத்தூர்** | - நூற்பு ஆலைகள், பொறியியல், தொழிற்சாலைகள் |
| 11. | **திருப்பூர்** | - பின்னல் ஆடைகள், ஆயத்த ஆடைகள் |
| 12. | **இராஜபாளையம்** | - அறுவை சிகிச்சைக்கான பஞ்சு பொருட்கள் |
| 13. | **சிவகாசி** | - தீப்பெட்டி பட்டாசு தொழிற்சாலை, அச்சிடுதல் |

ARISE AWAKE ACHIEVE

**SURESH' IAS ACADEMY**

**தமிழ் வழி**


| THOOTHUKUDI | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI |
|---|---|---|---|---|
| 0461 - 4000970 | 0462 - 2560123 | 75503 52916 | 0452 - 2383777 | 97555 52003 |
| 99445 11344 | 98942 41422 | 75503 52917 | 98431 10566 | 97555 52009 |

TEST 9 வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key - Tamil

அலகு - 1

**1 தமிழகத்தின் தொழில்துறை வரைபடத்தை விளக்குக.**

- தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட அதிகமான தொழிற்சாலைகளை உள்ளடக்கிய மாநிலமாக விளங்குகிறது. 6

**தமிழ்நாட்டின் தொழில்துறை வரைபடம்**

- கர்நாடகாவிற்கு அடுத்தபடியாக மிகப்பெரிய மென்பொருள் ஏற்றுமதியாளராக தமிழ்நாடு திகழ்கிறது.
- தரமணி டைடல் பூங்கா, சர்வதேச தொழில்நுட்ப பூங்கா, ஒலிம்பியா தொழில்நுட்ப பூங்கா (கிண்டி), சென்னை.

**உற்பத்தி மற்றும் பொறியியல் தொழிற்சாலைகள்**

- தமிழ்நாடு மாநிலமானது, நாட்டின் தொழிற்சாலை உற்பத்தியில் 11 - 12 சதவீதமும், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 15% பங்கினையும் கொண்டுள்ளது.
- இது மென்பொருள் ஏற்றுமதிக்கு பொருந்தாது.
- திருவள்ளூர், சென்னை, ஓசூர்

**சென்னை வாகன உற்பத்திதி**

- வாகன உற்பத்தியில் சிறந்து விளங்கும் சென்னை ஆசியாவின் டெட்ராய்டு என்று அழைக்கப்படுகிறது.
- அதிகப்படியான மருத்துவ வசதிகளை பெற்றதால் சென்னை இந்திய மருத்துவத்தின் தலைநகரம் என்று அழைக்கப்படுகிறது.

**தோல் தொழிற்சாலைகள்**

- தமிழ்நாடு 30% தோல் ஏற்றுமதியும் மற்றும் 70% தோல் பொருட்கள் உற்பத்தியும் செய்கிறது.
- ஆம்பூர், ராணிப்பேட்டை, வேலூர், வாணியம்பாடி, பேர்ணாம்பட்டு, சென்னை, திருச்சிராப்பள்ளி, ஈரோடு மற்றும் திண்டுக்கல்.

**ஜவுளி உற்பத்தி**

- கரூர் ஜவுளி பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படுகிறது.
- திருப்பூர் பின்னலாடை நகரம் என்று அழைக்கப்படுகிறது.
- உற்பத்தியில் ஜவுளி உற்பத்தியானது 14% பங்களிக்கிறது.

**வெடி உற்பத்தி**

- வெடி உற்பத்தியால் சிவகாசி குட்டி ஜப்பான் என்று நேருவால் அழைக்கப்பட்டது.

**வேதிப் பொருள் உற்பத்தி**

- சென்னையும், தூத்துக்குடியும் வேதிப்பொருள் உற்பத்தியில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

**2) தமிழகத்தில் தொழில் விரிவாக்கத்திற்கு திறவுகோலாக செயல்படும் முகமைகள் கூறுக?**

**SIPCOT** 6

- 1971ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.
- தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம்
- தமிழகத்தில் தொழிற்பேட்டைகளை உருவாக்கி தொழில் முன்னேற்றத்துக்கு உதவுதல்

**TANSIDCO**

- 1970ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.
- தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்
- மானியங்களும், தொழில்நுட்ப உதவிகளும் அளித்து சிறு நிறுவனங்களின் முன்னேற்றத்துக்கு உதவுதல்

**TIDCO**

- 1965இல் அமைக்கப்பட்டது.
- தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சிக் கழகம்
- கூட்டு முயற்சியின் அடிப்படையில் பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் முன்னேற்றத்துக்கு உதவுதல்

**ELCOT**

- 1977இல் அமைக்கப்பட்டது.
- தமிழ்நாடு மின்னணுவியல் கழகம்
- தனியார் மற்றும் பொது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப ஊக்கப்படுத்துதல்

**TIIC**

- 1949ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.
- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
- குறு, சிறு மற்றும் பெரிய நிறுவனங்களை நிதி சார்ந்த உதவிகளை செய்தல்

**3) தமிழ்நாட்டின் தொழிற்சாலை விரிவாக்கத்திற்கு உதவும் கொள்கை காரணிகள் கூறுக**

**1. கல்வி** 6

- மிகப்பரந்த அளவிலான மனித தொழில்நுட்ப வளங்கள்
- அதிகப்படியான பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.
- தமிழ்நாட்டின் அனைத்து கல்வி அமைப்புகளிலும் தொழில் சார்ந்த மற்றும் செயல்முறை பயிற்சி வழங்குதல்.

**2. உள்கட்டமைப்பு**

- ஊரகப் பகுதிகள் உட்பட அனைத்து பகுதிகளையும் மின்மயமாக்குதல்

SURESH

- அனைத்து பகுதிகளையும் இணைக்கும் மிகச்சிறந்த போக்குவரத்து உட்கட்டமைப்பு
- தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகள் வழியாக வணிகப் போக்குவரத்து மேற்கொள்ளப்படுகிறது.

**3. தொழிற்சாலைகளை மேம்படுத்துதல்**

- தமிழ்நாட்டில் தொழிற்சாலை முன்னேற்றத்துக்கான கொள்கைகள் வழங்கப்பட்டிருக்கிறது.
- முதலீடுகளை ஈர்க்கும் விதமாக தொழில்முனைவோருக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- சிறப்பு பொருளாதார மண்டலங்களில் நிறுவனங்களை நிறுவுவதற்கான சுதந்திரம்
- நெறிப்படுத்தும் வழிமுறைகள்
- உரிமம் பெறுதலில் நெகிழ்வுத்தன்மை
- வரி இல்லாத மண்டலங்கள்

**4. வளங்களின் அணிதிரட்டல்**

- தமிழ்நாட்டில் உள்ள சுய வேலை மற்றும் வட்டார தொழில் முனைவோரை ஊக்குவித்தல்

**4) தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப பொருளாதார மண்டலங்களை பட்டியலிடுக. 6**

- தமிழக அரசின் ஆணைக்கு இணங்க, ELCOTஆனது முதல் மற்றும் இரண்டாம் அடுக்கு நகரங்களை அதன் சிறப்பான உட்கட்டமைப்புகளை ஊக்குவிக்கிறது.
- ELCOSEZ'z (சிறப்பு பொருளாதார மண்டலங்களை குறிக்கிறது)

1. சென்னை – சோழிங்கநல்லூர்
2. கோயம்புத்தூர் – விளாங்குறிச்சி
3. மதுரை – இலந்தைகுளம்
4. மதுரை – வடபழனி – கிண்ணிமங்கலம்
5. திருச்சி – நாவல்பட்டு
6. திருநெல்வேலி – கங்கை கொண்டான்
7. சேலம் – ஜாகீரம்மாபாளையம்
8. ஓசூர் – விஸ்வநாதபுரம்

**5) முதலீட்டாளர்களை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் தொழிற்சாலைகள் யாவை?**

**உரிமை அடிப்படையில் தொழிற்சாலைகள் 1**

1. தனியார் துறை
2. பொதுத் துறை
3. கூட்டுத்துறை
4. கூட்டுறவுத் துறை
5. பன்னாட்டு நிறுவனம்

**1. தனியார் துறை 5**

- தொழில்முனைவோரால் நடத்தப்படும் நிறுவனம் ஆகும்.
- எ.கா : ஆப்பிள், அமேசான், டாடா முதலியன.

**2. பொதுத்துறை**

- ஒரு மாநிலம் மற்றும் மாநிலத்தில் உள்ள முகமைகளால் நடத்தப்பெறும் நிறுவனங்கள் ஆகும்.
- எ.கா : BHEL, BEC துர்காபூர் இரும்பு ஆலை முதலியன.

**3. கூட்டுத்துறை**

- ஒரு மாநிலத்தின் முகமைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து நடத்தும் நிறுவனமாகும்.
- எ.கா : மெட்ராஸ் உரத் தொழிற்சாலை, கொச்சின் சுத்திகரிப்பு நிலையம் முதலியன கூட்டுத்துறை நிறுவனங்கள்

**4. கூட்டுறவுத் துறை**

- மூலப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு சிறு குழு மக்கள் இணைந்து நடத்தும் நிறுவனங்கள் ஆகும்.
- எ.கா : அமுல், கோ – ஆப்டெக்ஸ் TANTEA முதலியன.

**5. பன்னாட்டு நிறுவனம்**

- பன்னாட்டு நிறுவனம் என்பது, பல்வேறு நாடுகளில் செயலாற்றுகிறது.
- அதிக வருவாய் ஈட்டும் ஒரு உலகளாவிய போட்டியாளராக திகழ்கிறது.
- எ.கா : மைக்ரோசாப்ட், நெஸ்ட்லே, கோ–கோ–கோலா முதலியன.

**6) இந்திய அரசின் ஏற்றுமதி – இறக்குமதி கொள்கையின் நோக்கம் மற்றும் முக்கிய சிறப்பம்சங்களை விவரி.**

**ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கை 1**

- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான வழிமுறைகளும் வழிகாட்டுதல்களும் கொடுக்கப்பட்டுள்ளன.
- இது 1992இல் போடப்பட்ட, வெளிநாட்டு வாணிபச் சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**நோக்கங்கள் 1**

- ஏற்றுமதியில் நிலையான வளர்ச்சி
- நுகர்வுப்பொருட்கள் மற்றும் மூலதன பொருட்கள் தொடர்பான அணுகுதல்
- உள்நாட்டு பொருட்களுக்கான சந்தைப்படுத்துதல் தேவை
- தொழில்நுட்ப வலுவை அதிகப்படுத்துதல்
- பொருளாதாரத்தினை முடுக்குதல்

**ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கையின் அம்சங்கள் 4**

- ஏற்றுமதிக்கான சுமைகளை 25% குறைகிறது.
- மேக் இன் இந்தியா திட்டத்தின்கீழ் உள்நாட்டு உற்பத்தி பொருட்களை அதிகரித்தல்.
- புதிய சிறப்பு பொருளாதார மண்டலங்களை உருவாக்குதல்
- ஏற்றுமதியை தாராளமயமாக்குதல்
- இறக்குமதிக்கான குறைவான சுங்கவரிகள்
- பணமதிப்பிழப்பு
- மின்சார வழங்குதிறனை அதிகப்படுத்துதல் (PSU).

SURESH'

7) **ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் மற்றும் ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டத்தினை பற்றி சிறு குறிப்பு வரைக.**

**ஸ்டார்ட் அப் இந்தியா** 3

- ஜனவரி 16, 2016ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- புதுமையான முன்னெடுப்புகளை ஊக்கப்படுத்த மற்றும் அதிகாரப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- வணிக தொடக்கங்களுக்கான ஒரு பலமான சூழல் அமைப்பை உருவாக்குதல்
- வேலை தேடுவோர்களுக்கு பதிலாக வேலையை உருவாக்குபவர்கள் நிறைந்த ஒரு நாடாக நம் நாட்டை மாற்றுதல்
- வரி விலக்கு, காப்புரிமை, சுய சான்றளிப்பு ஆகியவை முக்கிய நன்மைகளாக கருதப்படுகிறது.

**ஸ்டாண்ட் அப் இந்தியா** 3

- ஏப்ரல் 05, 2016ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- பழங்குடியின மக்கள் மற்றும் பெண் பயனாளர்கள் எளிதில் வங்கிக் கடன் பெற்றுத் தருவதை நோக்கமாகக் கொண்டது.
- கடன் தொகையானது 10 லட்சம் முதல் 1 கோடி வரை இருக்கலாம்.
- வேளாண் கூட்டணியுடன் ஒரு பசுமை நிறுவனத்தை உருவாக்குதல்
- SC / ST மற்றும் பெண்களின் பங்களிப்பு 51% உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.
- கடனானது 7 வருடத்திற்குள் திருப்பி செலுத்தப்பட வேண்டும்.

8) **பசுமை ஆற்றல் வழித்தடத்தின் (Green Energy Corridor) முக்கியத்துவத்தை கூறுக.**

**பசுமை ஆற்றல் வழித்தடம்** 1

- சூரிய ஒளி, காற்று உள்ளிட்ட புதுப்பிக்கப்பட்ட வளங்களில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை மாற்று ஆற்றல் நிலையங்கள் மூலமாக ஒத்திசைவு செய்தல்.

**பசுமை ஆற்றல் வழித்தடத்தின் முக்கியத்துவங்கள்** 5

- பொருளாதார அடிப்படையில் ஒரு நிலையான முன்னேற்றத்திற்கு துணை புரிகிறது.
- நாட்டின் நிலையான ஆற்றல் பாதுகாப்பினை முக்கிய நோக்கமாகக் கொண்டது.
- வேலைவாய்ப்பினை உருவாக்குதல்
- கார்பன் வெளியேற்றத்தை குறைத்தல்
- 2016இல் மேற்கொள்ளப்பட்ட பாரீஸ் உடன்படிக்கையின் ஒப்பந்தங்களை நிறைவேற்ற உதவுதல்
- மாநிலத்திற்குள்ளான பரிமாற்றங்களுக்கான செலவினங்களை குறைப்பதற்கு GEC உதவுகிறது.
- மொத்த மின் உற்பத்தியில் 50 சதவீதத்தினை புதுப்பிக்கப்பட்ட வளங்கள் மூலமாக உருவாக்குதல் (INSTS)
- உள்மாநில பரிமாற்ற அமைப்பினை உருவாக்குதல்
- இது 2030க்குள் 450 GW திறன் கொண்ட ஒரு புதுப்பிக்கக்கூடிய ஆற்றலை நிறுவுதல்

9) **சென்னை – கன்னியாகுமரி தொழில் வழித்தடம் – சிறுகுறிப்பு தருக.**

- துறைமுக நகரங்களின் பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் கிழக்கு கடற்கரை பொருளாதார இரண்டாம் பாகமாக அமைக்கப்படுகிறது. 1

**தொழிற்சாலை கட்டமைப்பானது, ஒரு உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பை வழங்குகிறது.** 1

- அதிவேக போக்குவரத்து வலைப்பின்னல் சாலை மற்றும் ரயில்வே
- சரக்குகளை திறம்பட கையாளும் திறன்கொண்ட துறைமுகங்களை கொண்ட மாநிலங்கள்
- நவீன விமானநிலையங்கள்-சிறப்பு பொருளாதார பகுதி / தொழிற்சாலை பகுதிகள்

**முக்கியக் குறிப்புகள்** 2

- உள்நாட்டு தொழிற்சாலைகள் மற்றும் துறைமுகங்களுக்கு இடையிலான தொடர்பை அதிகப்படுத்துதல்
- உலகளாவிய மதிப்பீட்டிலும், தேசிய உற்பத்தி வலைப்பின்னலிலும் இந்தியாவின் உற்பத்தியை பங்கெடுக்கச்செய்து அதிகப்படுத்துதல்
- வழித்தடத்தில் வேலை வாய்ப்பினை உருவாக்குதல்
- ஒற்றைச்சாளர முறை
- 15 மாநில நெடுஞ்சாலைகள் மேம்படுத்துதல்

**விருதுநகர் மற்றும் ஓட்டப்பிடாரத்தில் உபமின் நிலையங்களை நிறுவுதல்** 2

- இத்திட்டமானது 6 தொழிற்சாலை முனைகளை உள்ளடக்கியது.

1. மதுரை – திண்டுக்கல் – விருதுநகர் – தேனி
2. தூத்துக்குடி – திருநெல்வேலி
3. இராமநாதபுரம்
4. கடலூர் – நாகப்பட்டினம்
5. திருச்சி – புதுக்கோட்டை – சிவகங்கை
6. அரியலூர் – பெரம்பலூர்

- தூத்துக்குடியில் ஒரு நாளுக்கு 60 மில்லியன் லிட்டர் நீரை சுத்திகரிப்பதற்கான நிலையம்
- செங்கல்பட்டில் ஒரு மருத்துவ பூங்காவினை அமைத்தல்
- நாளுக்கு 20 மில்லியன் லிட்டர் நீரை சுத்திகரிப்பதற்கான நிலையத்தினை மணக்குடியில் அமைத்தல்

10) **முக்கிய துறை சார்ந்த தொழில்கள் என்றால் என்ன? மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை எழுதுக.**

- இந்திய தொழிற்சாலைகளுக்கான பிரிவில் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் 8 தொழிற்சாலைகள் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. 1

1. சுத்திகரிப்பு நிலையங்கள் **2**
2. மின்சாரம்
3. இரும்பு
4. நிலக்கரி
5. கச்சா எண்ணெய்
6. இயற்கை எரிவாயு
7. சிமெண்ட்
8. உரங்கள்

**குறிப்பிடத்தக்க அம்சங்கள்** **3**

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்சாலைகளானது, நாட்டின் வளர்ச்சியின் மேல் அதிக கவனம் செலுத்துகிறது.
- அதேநேரம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பாதிக்கிறது.
- இந்த நடவடிக்கையானது இந்திய உற்பத்தியின் இயற்பியல் அளவீட்டை அதிகரிக்க உதவுகிறது.
- பொருளாதாரத்தில் நிகழும் மாற்றங்களை ஆராய பயன்படுகிறது.
- இது காலாண்டு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பிற்கு நெருக்கமாக அமையும்.
- கொள்கை செயல்பாட்டு முறைகளுக்காக அரசு முகமைகளால் இது பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- முக்கியத் துறைகளானது உட்கட்டமைப்பு வெளிப்பாடு என்று அழைக்கப்படுகிறது.
- அடிப்படை தொழிற்சாலைகளை பொருளாதாரத்தின் அடிப்படையாக முன்னிறுத்துகிறது.
- தொழிற்சாலை உற்பத்திக் குறியீட்டை தயார் செய்ய பயன்படுகிறது.
- இது மொத்த உற்பத்திக் குறியீட்டில் 40.27% பங்களிப்பை கொண்டுள்ளது.

**11) பங்கு விலகல் மற்றும் அவற்றின் வகைகளை பற்றி விளக்குக.** **2**

- மத்திய அல்லது மாநில அரசானது ஆளுகையின் கீழ் உள்ள அசையா சொத்துகளை கலைத்தல் அல்லது விற்பதற்கான முன்னெடுப்பே பங்கு விலகல் ஆகும்.
- அரசு அந்நடவடிக்கைகளை கருவூல நிதிச் சுமைகளை குறைப்பதற்காக பணத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படுகிறது.
- நிதி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் முதலீடு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மை துறையானது பங்குகளை விற்பதற்கான ஒரு முக்கியத் துறையாகக் கருதப்படுகிறது.

**பங்கு விலகலின் வகைகள்** **3**

**1. சிறுபான்மை பங்கு விலகல்**

- அரசானது, 51 சதவீதத்திற்கும் அதிகமான மேலாண்மை கட்டமைப்பு கொண்ட நிறுவனங்களை தக்கவைக்கிறது (எடு) NTPC,NHPC, Power grid முதலியன.

**2. பெரும்பான்மை பங்கு விலகல்**


- அரசு பெரும்பான்மையான பங்குகளை விற்று. சிறிய பங்குகளை தக்க வைக்கிறது (எடு) IOC, BPCL, BALC முதலியன.

**3. முழுமையான தனியார்மயமாக்கல்**

- அரசு முழுமையான பங்குவிலகும் விதமாக 100% சதவீத பங்குகளையும் தனியார் நிறுவனத்துக்கு விற்பது ஆகும் (எடு) ஏர் இந்தியா.

**4. மூல உபாய பங்கு விலகல்**

- அரசு 26% பங்குகளை கொள்கிறது. ஒரு நிறுவனத்தின் முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் பெறுகிறது. **1**




**12) குடிமைப்பணிகளின் நல்அம்சங்களை பட்டியலிடுக**

**தொழில் துறை அமைப்பு** **6**

- இது அதிகாரிகளுக்கான தொழில்துறை அமைப்பு ஆகும்.
- இவர்கள் நிரந்தர, திறன் வாய்ந்த, வருவாய் பெறக்கூடிய பணியாளர்களாக விளங்குகின்றனர்.
- இது ஒரு முழு நேரப் பணியாக மற்றும் சேவையாக விளங்குகிறது,

**படிநிலை அமைப்புகள்**

- ஒவ்வொரு பொதுப்பணியாளரும் அவருடைய மேலான அதிகாரிகளுக்கு கீழ்படிதல் வேண்டும்.
- விருப்ப அதிகாரம் கொண்ட அதிகாரிகள், அவர் தம் துணைநிலை அதிகாரிகளை கண்காணிக்கின்றனர்.

**அரசியல் நடுநிலை**

- அரசியல் நடவடிக்கைகளை தவிர்க்கிறது.

- அணிசேராத அரசியல் ஆட்சி.

பாரபட்சமற்ற தன்மை

- ஒருதலைபட்சமாக இல்லாமல் கடமையை மறுசீரமைத்தல்
- மாநிலத்தின் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது.

சேவை முழக்கம்

- சமூக நலனுக்காக பணியாற்றுதல்
- சமூகத்தில் பணிவாக மற்றும் சேவை மனப்பான்மையில் பணியாற்றுதல்.

நிரந்தரமான சேவை

- மேல்படிப்புக்கான வயதை அடையும் வரை கடமைகளிலிருந்து வெளிநிற்றல்.

**13) அனைத்திந்தியப் பணிகள் ஏன் உருவாக்கப்பட்டது? மத்திய மற்றும் மாநிலப் பணிகளின் நியமன முறைகளை விளக்கு.**

அனைத்திந்திய சேவைகள் 3

- மாநிலத்தின் மேம்பாடு, சட்ட ஒழுங்கு, மத்திய மற்றும் மாநில அரசின் திட்டம் மற்றும் செயல்படுத்துவதற்கான கொள்கைகள் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக அனைத்திந்திய பணிகளை உருவாக்க அரசமைப்பு வழிவகை செய்கிறது.

அம்சங்கள்

- மாநில அரசின் உரிமைகளை பாதுகாக்க இது ஒரு முக்கியமான அதிகாரமாக விளங்குகிறது.
- அனைத்திந்திய சேவைகளின் கீழ் பணியமர்த்தப்பட்ட நபர்களுக்கான சட்டங்கள் மற்றும் பணியமர்த்தும் முறைகள் அனைத்தும் அனைத்திந்திய சேவைகள் சட்டம் 1951-ன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது,
- அனைத்திந்திய சேவைகளானது, ஒரு மையப்படுத்தப்பட்ட நிரந்தர நிறுவனமாக. இந்தியாவின் மூல நிர்வாக அமைப்பாக செயல்படுகிறது.
- அனைத்திந்திய பணிகள் முக்கியமான பொறுப்புகளை உள்ளடக்கிய ஒரு பணியாகும், நாட்டின் மீதான பார்வையை மாற்றும் அதிகாரம் படைத்தவர்களாக விளங்குகின்றனர்.

மத்திய & மாநில சேவைகளுக்கான பல்வேறு பணி நிலைகள் 3

- அனைத்திந்திய பணிகளில் இரு முறைகளில் பணியமர்த்தும் முறைகள் மேற்கொள்ளப்படுகிறது.

1. நேரடி பணியர்த்துதல்.
2. தேர்வு முறையில் பணியமர்த்துதல்.

நேரடி பணியமர்த்துதல்

- IAS & IPS க்கான குடிமை தேர்வு முறை
- IFS க்கான இந்திய வனத்தேர்வு.
- இந்தத் தேர்வுகளானது UPSC ஆல் நடத்தப்படுகிறது,

தேர்வு முறையில் பணியமர்த்துதல்

- SC/SP/STக்கான பதவி உயர்வு.
- IAS பதவியில் மாநிலம் அல்லாத குடிமை சேவைகளுக்காக தேர்ந்தெடுக்கும் முறை.

**14) அனைத்திந்திய பணிகளில் புதிதாக அனைத்திந்திய நீதித்துறை பணி ஏன் தேவைப்படுகிறது?**

இந்திய நீதித்துறை சேவைகள் 6

- மத்திய மற்றும் மாவட்ட நீதிபதிகளின் நியமனத்தை மையப்படுத்தும் ஒரு சீர்திருத்தம் ஆகும்.
- கூடுதல் மாவட்ட நீதிபதிகள் மற்றும் அனைத்து மாநில நீதிபதிகள்.
- புதிய அனைத்திந்திய நீதி சேவைகளுக்கான பதவியை உருவாக்க 1976ல் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புச் சட்டதிருத்தம் 42 வழிவகை செய்கிறது.
- இந்திய அமெரிக்காவை போல் அல்லாமல் ஒரு ஒன்றுபட்ட நீதித்துறையை கொண்டுள்ளது.
- அரசியலமைப்பு விதி 312. அனைத்திந்திய பணிகள் பற்றி விளக்குகிறது.
- நீதிபதிகளுக்கான நீதித்துறை பொறுப்புகளானது. அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவாக அமைந்துள்ளது.
- சட்டரீதியாக சிறந்த திறன் கொண்டவர் பணியமர்த்தப்படுவதற்கான ஒரு வழியாக உள்ளது.
- இளம் தலைமுறையினரில் சிறந்த திறமையாளர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள்.
- மத்திய, மாநில உறவுகளுக்காக ஏற்படுத்தப்பட்ட பூஞ்சி குழுவின் பரிந்துறையின் பேரில் அனைத்திந்திய சேவைகள் உருவாக்கப்பட்டது.

**15) பொது மற்றும் சிறப்புத்துறை வல்லுநர்களின் நிர்வாக சூழல்கள் பற்றி விரிவாக விளக்குக. 1**

- பொது வாதிகள் மற்றும் நிபுணர்கள் ஆகிய இருவரும் இந்திய குடிமை சேவைகளின் இரு கூறுகளாக கருதப்படுகின்றனர்.
- பொதுவாதி என்பவர் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்றவராக திகழ்கிறார்.
- நிபுணர்கள், ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டும் சிறந்து விளங்குகின்றனர்.

பொதுவாதிகள் Vs நிபுணர்கள் 5

- பொதுவாதி என்பவர், திட்டமிடல், ஒருங்கிணைத்தல், வழிகாட்டுதல், அறிக்கை வெளியிடுதல் உள்ளிட்ட அனைத்து தளங்களிலும் நிபுணத்துவம் பெற்றவராக விளங்குகிறார்.
- இந்திய பொருளாதார சேவை, இந்திய புள்ளியியல் சேவை, இந்திய பொறியியல் சேவை உள்ளிட்ட அனைத்திலும் நிபுணர்கள் பணியமர்த்தப்படுகின்றர்.

பொதுவாதிகள் > நிபுணர்கள்

- பொதுவாதிகள் என்பவர் அமைச்சருக்கும், நிபுணருக்கும், மக்களுக்கும் அழுத்தக்குழுக்களுக்கும் இடையில் இணைப்புப் பாலமாக விளங்குகிறது.

- உயர் நிர்வாக திறன்களுக்கும், பொருளாதாரம் பற்றிய புரிதல்களும் மக்களின் சமூக – பொருளாதாரநிலைகள் மற்றும் அனைத்து வகையான நிர்வாக முறைகளுக்கும் பொருத்தமானவர்களாவர்.

**16) அமைச்சர் மற்றும் குடிமைப் பணியாளர்களுக்கிடையேயான வேறுபாடுகளைப் பட்டியலிடுக.**

| வ.எண் | அமைச்சர் | குடிமைப் பணியாளர் 6 |
|---|---|---|
| 1 | முன் அனுபவமில்லாத இயல்பு | பணிசார்ந்து சிறந்து விளங்குகிறார் |
| 2 | தொழில்நுட்ப அறிவு, பெறாதிருத்தல் | தொழில்நுட்ப அறிவு பெற்றிருத்தல் |
| 3 | பாகுபாடான | பாகுபாடற்ற |
| 4 | தற்காலிகமானவர் | நிரந்தரமானவர் |
| 5 | நிறைய பொதுத் தொடர்புகள் | குறைவான பொதுத் தொடர்புகள் |
| 6 | அதிகமான சட்டமன்ற தொடர்புகள் | குறைவான சட்டமன்ற தொடர்புகள் |
| 7 | கொள்கை கட்டமைப்பு தொடர்பான வேலைகள் | அமைச்சர் ஏற்படுத்தித் தந்த திட்டத்தை செயல்படுத்துதல் |
| 8 | முடிவு எடுக்கும் அதிகாரம் கொண்டவர் | ஆலோசனை பிரிவாக செயல்படுகிறார். |
| 9 | திட்டம் உருவாக்குதலில் கூடுதலான ஒருங்கிணைப்பு | திட்டங்களை செயல்படுத்துவதில் கூடுதல் திறன் |
| 10 | மக்கள் தேர்தல் மூலமாக இவர்கள் அதிகாரத்தை முடிவு செய்கின்றனர் | நிர்வாகம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய இருமுறைகளிலும் அதிகாரம் நிர்ணயிக்கப்படுகிறது. |
| 11 | இறையாண்மை கோட்பாடு | அரசியல் செயல்முறைகளுக்கு துணை நிற்றல் |
| 12 | துறைக்கு அரசியல் ரீதியாக அமைச்சர் தலைமை வகிக்கிறார் | துறையானது ஒரு தலைமைச் செயலக அதிகாரியால் அமைக்கப்படுகிறது. |

**17) அதிகார வர்க்கம் என்றால் என்ன? விளக்கம் தருக.**

**<u>அதிகார வர்க்கம்</u>** 2

- வரையறுக்கப்பட்ட சட்டங்களை பின்பற்றி, ஒரு சீரான செயல்முறைகளை உறுதிப்படுத்துவதற்கான ஒரு நிர்வாக அணுகுமுறையை அதிகார வர்க்கம் மேற்கொள்கிறது.

**<u>விளக்கம்</u>**

- திறன்வாய்ந்த, நிபுணத்துவம் பெற்றவர்களை உள்ளடக்கிய ஒருநிரந்தர அமைப்பாக குடிமைப்பணி சேவைகள் / அதிகார வர்த்தகம் திகழ்கிறது.

**<u>அதிகார வர்க்கத்தின் பங்குகள்</u>**

- அரசு அதிகாரிகள்
- அரசின் செயல்முறை கொள்கைகள்
- சம்பந்தப்பட்ட அமைச்சங்களுடனான தொடர்பு
- நிரந்தர, செயல்படும் பகுதியாக உள்ளது.

**<u>அதிகாரவர்க்கத்தின் நன்மைகள்</u>** 2

- அதிகாரப் பங்கீடு
- வேலைத்திறன்
- பொறுப்பு மற்றும் இணக்கம்
- முடிவெடுக்கும் திறன்
- எளிதான நிர்வாக முறை

**<u>அதிகார வர்க்கத்தின் தீமைகள்</u>** 2

- சிகப்பு நாடாத்தன்மை
- ஊழல்
- ஆவணப்படுத்துதல்
- உறவுமுறை
- அதிகார வர்க்கத்தால் மேற்கொள்ளப்படும் தாமதம்

**18) அரசுப்பணிகளில் இடைக்கால நுழைதலின் நன்மைகள் மற்றும் குறைபாடுகளை பற்றி எழுதுக.**

**<u>பக்கவாட்டு நுழைவு</u>** 1

- தனியார் துறையிலிருந்து ஒரு குறிப்பிட்ட செயல்பாடுகளில் நிபுணத்துவம் பெற்ற ஒருவரை அரசு துறைகளில் அல்லது அமைச்சகங்களில் பணியமர்த்தும் ஒரு முயற்சி ஆகும்.

**<u>1. பக்கவாட்டு நுழைதலின் நன்மைகள்</u>**

**<u>குறிப்பிட்ட அறிவுசார் தேவை</u>** 2.5

- திறமைகளின் தேவைகள் அதிகமாக இருப்பதால் நிர்வாகமானது கடினமாக உள்ளது.
- இந்த குறைபாட்டை சமன் செய்ய பக்கவாட்டு நுழைவானது தவிர்க்க முடியாததாகிறது.

**<u>காலிப்பணியிடங்களை நிரப்புதல்</u>**

- எப்பொழுதும் 1500 IAS அதிகாரிகள் தேவை இருந்துகொண்டே இருக்கிறது.
- இந்த பற்றாக்குறையை களைய பக்கவாட்டு நுழைவு துணை செய்கிறது.

**<u>வேலையில் மாற்றங்களை கொண்டு வருதல்</u>**

- பொருளாதாரத்திற்கான மதிப்பினை கொண்டு வருதல்
- அரசுத் துறையில் தாக்கத்தை ஏற்படுத்துதல்

**<u>பங்களிப்பு நிர்வாகம்</u>**

- அதிக பங்களிப்பு
- தனியார் மற்றும் பொதுத் துறையில் பங்குதாரர்களின் பங்களிப்பு

**<u>2. பக்கவாட்டு நுழைவில் உள்ள தீமைகள்</u>**

**<u>சிறந்த நிபுணத்துவம்</u>** 2.5

- நிபுணத்துவம் என்பது அனைத்து அமைச்சகங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- நிபுணத்துவ குழுக்கள், கலந்துரையாடல், சிந்தனைத் தொட்டி அமைப்புகள்
- நிபுணத்துவத்தைக் கொண்டு முடிவெடுக்கும் திறன் வளர்த்தல்

**முடிவெடுக்கும் செயல்பாடுகள்**

- அமைப்பு பற்றிய புரிதலிலேயே வெற்றி அடங்கியுள்ளது.
- நிரந்தர அமைப்பின்கீழ் பணியாற்றும் திறன்

**வருவாய் நோக்கமும் Vs பொது சேவையும்**

- தனியார் துறையானது வருவாய் நோக்குடனும், அரசுத் துறையானது பொதுச் சேவை நோக்கிலும் செயல்படுகிறது.

**கருத்து வேற்றுமை**

- ஒரு தனியார் துறையை நிர்வாகத்தில் அனுமதிப்பது வேலைத்திறனை பாதிக்கும்.
- இது தனியார் துறையில் கடுமையான நடத்தை நெறிமுறைகளை தேவையானதாக ஆக்குகிறது.

**அலகு - 2**

1) **தமிழ்நாட்டின் முக்கிய தொழில்துறை தொகுப்புகள் மற்றும் அவற்றின் சிறப்புகளை விவரி?** 10

**தொழில்துறை தொகுப்பு**

- உற்பத்தி, வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், தொழில்முனைவோர் உள்ளிட்ட கூறுகளை வலுப்படுத்தி பிராந்திய பொருளாதார முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டதே தொழில்துறை தொகுப்பு ஆகும்.

**தமிழ்நாட்டின் முன்னணி தொழில்துறை தொகுப்புகள்**

1. **வாகனத் தொழில்துறை தொகுப்புகள்**

- ஆசியாவின் டெட்ராய்டு என்று சென்னை அழைக்கப்படுகிறது.
- சென்னை, வாகனத் தொழில்துறை மையமாகத் திகழ்கிறது.
- இது உள்நாட்டு மற்றும் பன்னாட்டு உற்பத்தி அலகுகளை கொண்டுள்ளது.
- TVS, TI Cycles, Ashok Leyland, Standard motors முதலியன உள்நாட்டு நிறுவனங்கள் ஆகும்.
- Hyundai, Ford, Diamler – Benz, Renault Nission முதலியன பன்னாட்டு நிறுவனங்கள் ஆகும்.
- ஓசூர் மற்றும் கோயம்புத்தூர் பிராந்தியங்கள், வாகனத் தொழில்துறைத் தொகுப்பாக மாற்றப்பட்டு வருகிறது.

2. **சரக்குந்து உள்கட்டுமான தொகுப்பு**

- மேற்குத் தமிழகத்தில் உள்ள நாமக்கல், திருச்சி, திருச்செங்கோடு பகுதிகளில் சரக்குந்து உடற்கட்டுமாக தொழிற்சாலை தொகுப்புகள் அதிகம் காணப்படும் பகுதிகள் ஆகும்.
- 50க்கும் மேற்பட்ட சரக்குந்து உடற்கட்டுமான தொகுப்புகளானது கரூர் பகுதியில் காணப்படுகிறது.
- எ.கா IRIZAR - TVS
- ஆழ்துளைக் கிணறு அமைக்கும் லாரிகளின் கட்டுமான தொழிற்சாலைகளானது திருச்செங்கோடு பகுதியில் அதிகமாகக் காணப்படுகிறது.

3. **ஜவுளி தொழில்துறை தொகுப்பு**

- தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று கோயம்புத்தூர் அழைக்கப்படுகிறது
- ஜவுளித் துறையின் பள்ளத்தாக்கு என்று கரூர் அழைக்கப்படுகிறது.
- பின்னலாடை நகரம் என்று திருப்பூர் அழைக்கப்படுகிறது.
- ஈரோடு மற்றும் சேலம் பகுதிகளில் விசைத்தறி பரவலாகக் காணப்படுகிறது.
- நாட்டில் 80% பருத்தி பின்னலாடை ஏற்றுமதிய திருப்பூர் மேற்கொள்கிறது.
- 1980லிருந்து 3 லட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பினை இத்துறை வழங்குகிறது.
- வீட்டு உபயோகப் பொருட்களான படுக்கை, தரை விரிப்புகள் ஜன்னல் திரைகள், துண்டுகள் ஆகியவைகளின் முதன்மை ஏற்றுமதி மையமாக கரூர் உள்ளது.
- தரைவிரிப்பு மற்றும் படுக்கை விரிப்புகளின் முதன்மை உற்பத்தி மையமாக பவானி மற்றும் குமாரபாளையம் விளங்குகிறது.

4. **தோல் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி தொகுப்பு**

- தமிழகம் 60% தோல் பதனிடுதல் மற்றும் 38% தோல் காலணிகள் உற்பத்தியினை மேற்கொள்கிறது.
- வேலூர் மற்றும் அதனருகில் ராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி, வாலாஜாபேட்டை முதலியப் பகுதிகளில் தோல் தொழில் தொகுப்புகள் அதிகமாகக் காணப்படுகிறது.
- வேலூரே தோல் பொருட்களுக்கான மிகப்பெரிய ஏற்றுமதியாளராக விளங்குகிறது

5. **தீப்பெட்டி, வெடி மற்றும் அச்சகத் தொகுப்புகள்**

- வெடி உற்பத்தி மற்றும் அச்சக வேலைப்பாடுகள், தொழிற்சாலைகள் அதிகம் காணப்படும் தொகுதியாக சிவகாசி விளங்குகிறது.
- இது 90% வெடி உற்பத்தியிலும், 80% தீப்பெட்டி உற்பத்தியிலும் 60% அச்சகத் தொழிலும் தன்னுடைய பங்களிப்பை செய்கிறது.

6. **மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை**

- 1990இல் ஏற்பட்ட மின்னணு சீர்திருத்தத்திற்குப் பின், மாநிலமானது வன்பொருள் மற்றும் மின்னணு பொட்கள் உற்பத்தியில் தீவரம் காட்டியது.
- மென்பொருள், நிறுவனங்களானது சென்னையில் பரவலான அளவிலும் கோவையில் குறிப்பிட்ட அளவிலும் மென்பொருள் சேவைகளுக்காக மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

SURESH'

**தமிழகத்தின் தொழில்துறை தொகுப்புகளுக்கான அம்சங்கள்**

- வேலைவாய்ப்பினை உருவாக்குதல்
- ஏற்றுமதியை அதிகப்படுத்துதல்
- பொருளாதார முன்னேற்றம்
- மாநில செயல்பாட்டு பிரிவுகளை பலப்படுத்துதல்
- திறன் மேம்பாடு
- மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி
- வேகமான மற்றும் நீடித்த வளர்ச்சி

**முடிவுரை** 2


- தொழில்துறை தொகுப்பானது, தமிழகத்தின் பொருளாதாரம், வேலைவாய்ப்பு, திறன் பயன்பாடு, வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை உயர்த்த பயன்படுகிறது.


**2) தொழிலக அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகளை வெபரின் தொழிலக அமைவிட கோட்பாட்டுடன் ஒப்பிட்டு விளக்குக.**

**வெபர்ஸ் அமைவிட கோட்பாடு** 2

- தொழிற்சாலை அமைவிட கோட்பாட்டை 1909ம் ஆண்டு ஆல்பிரட் வெபர் வெளியிட்டார். இது புவியியல் அமைவிடங்களின் இழு காரணிகளை வலியுறுத்துகின்றன.

**வெபரின் அமைவிட முக்கோணம்** 2




**தொழிற்சாலை அமைவிடங்களுக்கான அச்சுறுத்தும் காரணிகள்** 8

**1. மூலப்பொருட்கள் பெறுதல்**

- மூலப் பொருட்கள் கிடைக்கும் இடங்களுக்கு அருசிலேயே தொழிற்சாலைகள் அமைந்திருத்தல் வேண்டும்.
- மூலப்பொருட்களை குறைவான பொருட் செலவில் பெறுதல் வேண்டும் எ.கா: எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், விசாகப்பட்டிணம்

**2. மின்வசதி பெறுதல்**

- மின்வசதி உள்ள இடங்களில் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும்
- தடையில்லாத மின்சார சேவையை உறுதி செய்திடல் வேண்டும்.
- தொடர்ச்சியான உற்பத்தி முறையே முதன்மையான தன்மையாக விளங்குகிறது (எ.கா) நீர் மின் திட்டங்களுக்கு அருகிலுள்ள அலுமினியம் தொழிற்சாலை

**3. போக்குவரத்துக்கான செலவு**

- மூலப்பொருள் கொள்முதலுக்காக சிறந்த போக்குவரத்து முறை தேவையாக உள்ளது
- முடிவுற்ற பொருட்களை விற்பதற்கு ஏற்றவாறு சந்தைப் பகுதிகளுக்கு அருகாமையில் அமைந்திருத்தல் வேண்டும்.

**4. சந்தை அருகிலிருத்தல்**

- தொழிற்சாலை அமைவிடத்தின் முக்கிய அம்சமாக விளங்குகிறது
- உற்பத்தி செய்யப்பட பொருளின் விலையை இக்காரணியே நிர்ணயிக்கிறது

**5. பணியாளர்கள்**

- தொழிற்சாலையை இயக்க வேலையாட்களின் தேவை அதிகமாக உள்ளது
- பணியாளர்கள் 3 வகையாக பிரிக்கப்படுகின்றனர். திறன்வாய்ந்தவர்கள், பகுதியளவு திறன் வாய்ந்தவர்கள் மற்றும் திறனற்றவர்கள் என்று பகுக்கப்படுகின்றனர்.
- ஊதியமானது, அவர்களது திறனுக்கேற்ப வழங்கப்படுகிறது.
- குறைவான ஊதியம் பெறும் பணியாளர்களே, பம்பாயில் பருத்தி தொழிற்சாலை வளர்ச்சிக்கு மிகமுக்கிய காரணமாக உள்ளனர்.
- பணியாளர்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் தொழில்முனைவோர் தொழில் துவங்குவதற்கு ஆர்வம் காட்டுகின்றனர்.

**6. கொள்கை கட்டமைப்பு**

- அரசானது, ஊக்கத்தொகை வழங்குவதன் மூலம் பல்வேறு தொழிற்சாலைகளை துவங்குகிறது.
- நிதி, நிலம், நீர் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றை ஏற்படுத்தித் தருதல்
- பின்தங்கிய பகுதிகளில் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல்
- வரிவிலக்கு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வசதி, சந்தைப்படுத்துவதற்கான இடைவெளி ஆகியவற்றை அரசு ஏற்படுத்தித் தருதல் வேண்டும்.

7. **மூலதன உருவாக்கம்**

- தொழிற்சாலை உருவாக்கத்திற்கு மூலதனம் மிக முக்கிய காரணியாக உள்ளது.
- இந்தத் தேவை வங்கிகள் மற்றும் நிதிமுகமைகளால் பூர்த்தி செய்யப்படுகின்றன.

8. **இயற்கை பருவ நிலைகள்**

- தொழிற்சாலை அமைப்பில் நிலப்பரப்பு முக்கியப் பங்காற்றுகிறது
- நீர் வசதி, கழிவுநீர் வசதி, கழிவு வெளியேற்றம் முதலியன
- பம்பாயில் ஏற்படும் ஈரப்பத மாற்றங்கள் பருத்தி தொழிற்சாலைக்கு உதவுகிறது.

3) **உதயமாகக்கூடிய தொழில் மற்றும் அதன் முக்கிய அம்சங்களை எடுத்துக்காட்டுடன் குறிப்பு தருக.**

**உதயமாகக்கூடிய தொழிற்சாலை** 2

- வேகமாக பரவிவரும் ஒரு தொழில்முறையாக இது உள்ளது.
- எ.கா : 1990களில் தொடங்கப்பட்ட தொலைத்தொடர்பு தொழிற்சாலையானது எதிர்கால முக்கியத்துவம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- உதயமாகக்கூடிய தொழிற்சாலை என்ற வார்த்தை 1983ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இது வளர்ந்துவரும் பொருளாதாரத்திற்கு ஏற்ற வெற்றிகரமான உற்பத்தி முறையை விளக்குகிறது.

**எடுத்துக்காட்டுகள்** 1

- 2003 – 07 க்கான மாற்றப்பட்ட ஆற்றலுக்கான துறை மற்றும் 2011 – 12இல் சமூக ஊடகம் மற்றும் மேகக் கணிமைத் தொழிற்சாலை , உதயமாகக்கூடிய தொழிலின் மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.
- இது மிக உயரிய மற்றும் புதுமையான நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.
- அதீத வளர்ச்சியின் மூலம், போட்டித் தொழிற்செயல்பாடுகளை வழக்கற்றுப்போக வைக்கும் தன்மை கொண்டது.
- இது நெடுங்காலம் நீடித்திருக்கும் வாய்ப்பினை பெற்றிருப்பதால் மாறிவரும் வணிகச் சூழ்நிலைக்கேற்ப இது தன்னை தகவமைக்கத் தவறுகிறது.
- இது மறைவு வணிகம் என்று அழைக்கப்படுகிறது.
- கலிபோர்னியா தகவல் தொழில்நுட்ப நிறுவனம், பெங்களூர் ஹைட்ரஜன் எரிபொருள் உற்பத்தி நிறுவனம், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை, வலைதள கலைக்களஞ்சியம் ஆகியவை உதயமாகக்கூடிய தொழிலுக்கான எடுத்துக்காட்டு ஆகும்.

**இந்தியாவில் உதயமாகக்கூடிய தொழில் வளர்ச்சிக்கான கூறுகள்** 1

- வலுவான தேவை : இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி 2012இல் அமெரிக்க டாலர் மதிப்பில் 1983லிருந்து 2023இல் அமெரிக்க டாலர் மதிப்பில் 3,273.85 ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- புவியியல் அமைப்பு : இந்தியாவின் புவியியல் நன்மைகள்– கிழக்கு மற்றும் மத்திய, தென்கிழக்காசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதிக்கு ஏற்ற அமைவிடத்தில் அமைந்துள்ளது.
- கொள்கைத்துணை : ஜுலை 1991, தொடக்கத்தில் பணியாளர் பெருக்கம் காரணமாக பொருளாதாரமானது கலப்புப் பொருளாதாரத்தை நோக்கி நகரத் துவங்கியது.
- இந்தியா, நிறுவனங்களுக்கு தேவையான போதுமான தொழிலாளர்களை கொண்ட நாடாகத் திகழ்கிறது.

**முக்கிய அம்சங்கள்** 8

- கணிசமான மற்றும் விரைவான வளர்ச்சியை கொண்ட துறைமுகமாக விளங்குகிறது.
- வளரும் நிலைகளில் பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிவகை செய்கிறது.
- தற்காலத் தலைமுறைகளுக்கு ஏற்ற வகையில் இத்துறை உள்ளது.
- இது நிலைத்தன்மை கொண்டது, மாற்றமடைவது இல்லை.

**நிறைய நிறுவனத் தொடக்கம்**

- இந்திய அரசே ஸ்டார்ட் அப் இந்தியா திட்டத்தினை செயல்படுத்தி உள்ளது.
- புதிய தொழில்முனைவோருக்கு வழிவிடுகிறது.
- இத்துறையானது முழுமையாக பணியாளர்களைச் சார்ந்துள்ளது.
- பொருளாதாரத்தை வலுப்படுத்தி வேலைவாய்ப்பினை வழங்குகிறது.

**துணிகர மூலதன நிதி**

- வணிக முன்மொழிவுகளுக்கான வழிமுறைகளை உள்ளடக்கியது.
- ஏற்கனவே நடைமுறையில் உள்ள எதிர்பார்க்கப்படும் போட்டித்தன்மையை மறுசீராய்வு செய்தல்.
- நிறுவனத்தின் நிர்வாகம் பற்றிய விளக்கங்கள் மற்றும் கொள்கை கட்டமைப்பை ஆராய்தல்.

**நம்பகத்தன்மை மற்றும் நிலைத்தன்மை**

- வருவாய் உருவாக்கமே முக்கியக் கூறாக உள்ளது.
- பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலை போன்ற குறுகிய காலத்திலான நிலையான வளர்ச்சி
- மேம்படுத்தப்பட்ட முதலீடு மற்றும் உறுதியான திருப்பியளிப்பு
- குறிப்பிட்ட காலத்திற்குள் முதலீட்டையும், வருவாயையும் பெறுகிறது.
- மேம்படுத்தும் செயல்பாட்டில் இதன் இயங்குதன்மை குறைந்த செலவுடையதாக அமைகிறது.

SURESH

**4) பாதுகாப்பு தொழில் வழித்தடம் பற்றி சுருக்கமாக எழுதுக.**

**பாதுகாப்பு வழித்தடம்** 1

- பொதுத்துறையில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்புத் தளவாடங்களின் உள்நாட்டு உற்பத்தியை செய்வதற்காக, பாதுகாப்புத் துறையை பலப்படுத்த பயன்படும் வழித்தடம் ஆகும்.
- 2018இல் நிறுவப்பட்டு, 20.01.2019 அன்று தொடங்கப்பட்டது.
- இடம் : தமிழ்நாடு மற்றும் உத்திரப்பிரதேசம்

**தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் வழித்தடம்** 1

- சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், ஓசூர் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இவ்வழித்தடமானது புதிய பாதுகாப்பு தொழில்நுட்ப உற்பத்திகளை உருவாக்க பயன்படுகிறது.

**தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் வழித்தடத்தின் அம்சங்கள்** 1

- TIDCO வானது மெட்ராஸ் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி கழகத்துடன் இணைந்து செயல்படுகிறது.
- பொது உள்கட்டமைப்பு, பொது சான்றிதழ் மையம், பொது ஆய்வு வசதிகள் உள்ளிட்ட அனைத்திலும் மெட்ராஸ் IIT பங்குகொள்கிறது.
- வளங்கள், யுக்திகள் மற்றும் பாதுகாப்பு வழித்தட மேம்பாட்டிற்கான நிபுணத்துவம் உள்ளிட்ட அனைத்திலும் அறிவுசார்ந்த பங்களிப்பினை அளிக்கிறது.
- மே 2020இல் வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழிற்கொள்கை நிறுவப்பட்டது.

**தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ள DIC இன் தன்மைகள்** 3

- தமிழ்நாடு மேம்படுத்தப்பட்ட கட்டமைப்புடன் கூடிய சாலை மற்றும் ரயில்வே வலைப்பின்னல் கொண்டது.
- மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாகத் திகழ்கிறது.
- இது 4 விமான நிலையங்களையும் 2 கடற்படை விமான நிலையங்களைக் கொண்டது.
- தமிழக அரசு பாதுகாப்பு மற்றும் விண்வெளி, கொள்கைகளைக் கொண்டது.
- இந்திய பாதுகாப்புத் துறையில் 30% பங்குகளை அளிப்பதே இதன் நோக்கமாகும்.
- சென்னை விண்வெளி பூங்கா மேம்பாடு, ஸ்ரீபெரம்பதூர்

**சவால்கள்** 3

**1. பாதுகாப்புத் துறையில் தொழில்நுட்ப மேம்பாடு**

- நவீன மின்னணு சாதனங்களின் கொள்முதல்
- குறைவான நிதி ஒதுக்கீட்டில், தொழில்நுட்பத்திற்கான மிகப்பெரிய முதலீடு

**2. தொழிற்சாலைகளின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்தல்**

- சிறப்பு பொருளாதார மண்டலங்களில் உள்ள வரி நன்மைகள்
- துரித முடிவெடுத்தல் திறன்
- உயர்ந்த தரங்களில் செயலாற்றுதல்
- தரக்கட்டுப்பாடு

**3. தனியார் துறையின்மீது குறைவான ஈடுபாடு**

- பொதுத்துறையின் மூலம் கவனம் செலுத்துதல்
- தனியார் துறையின் குறைவான தேவைகள்
- பரிசோதனை மற்றும் வரிசைப்படுத்துதல்

**சிறப்பு அம்சங்கள்** 3

- ஒற்றைச்சாளர அமைப்புமுறை
- ஆட்சி சுழற்சியை பகுத்தறிதல்
- எளிதான வழங்குமுறை மற்றும் தடையற்ற மின்சாரம்
- உறுதியளிக்கப்பட்ட நீர் விநியோகம்
- நான்கு வழிச்சாலை வலைபின்னங்கள்

**முடிவுரை**

- நாட்டை ஒரு சுயசார்பு நாடாக, உற்பத்தியை மேம்படுத்த, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால சாலை அமைப்புகளை மேம்படுத்தம் திட்டத்தை உள்ளடக்கிய 'Make in India' திட்டத்தை அடையாளப்படுத்துதல்

**5) பிரதான் மந்திரி கதி சக்தி மாஸ்டர் திட்டம் பற்றி எழுதுக.**

- அக்டோபர் 2021இல் நிறுவப்பட்டது. 1
- பல்முனை தொடர்பிற்கான தேசியத் திட்டம்
- இந்திய உட்கட்டமைப்புக்கான திட்டங்களை ஒருங்கிணைத்து, திட்டமிட்டு செயல்படுத்துதல்
- சரக்கு கையாளுதலில் உள்ள செலவினைக் குறைத்தல்

**கூறுகள்** 2

- 16 அமைச்சகங்கள் மற்றும் துறைகளை உள்ளடக்கிய ஒரு டிஜிட்டல் தளம்
- ரயில்வே மற்றும் சாலைகளும் இதில் அடங்கும்
- ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் 4 வருடத்தில் உட்கட்டமைப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- ரூ 100 லட்சம் கோடி செலவிலான ஒரு முழுமையான கட்டமைப்பு
- சாகர்மாலா, பாரத்மாலா, திட்டம் உள்ளிட்டவைகளுடன் ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- ஜவுளி, பாதுகாப்பு, தொழில்துறை, மின்னணுவியல் உள்ளிட்ட அனைத்து பொருளாதார மண்டலங்களை உள்ளடக்கியது.
- நாடு தழுவிய அளவிலான பொருட்கள் மற்றும் மக்களின் தடையற்ற நகர்வு.

**கதி சக்தியின் 6 தூண்கள்** 2

1. விரிவான தன்மை
2. முன்னுரிமை
3. தேர்வுமுறை
4. ஒத்திசைவு
5. பகுப்பாய்வு
6. நிலையற்றத் தன்மை

**அம்சங்கள்** 3

- அமைச்சகங்களுக்கு இடையிலான மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பு.
- ஒவ்வொரு பங்குதாரர்களையும் கருத்தில் கொண்டு கடைநிலைத் தொடர்பு
- துறைசார்ந்த திட்டமிடலை கடந்து, ஒரு நிறுவனத்தின் முழுமையான திட்டமிடல்
- சரக்குகள் கையாளும் திறனை மேம்படுத்துதல் மற்றும் துறைமுக நடவடிக்கைகளை மேம்படுத்துதல்
- 11 தொழில் வழித்தடத்தையும் மற்றும் 2 பாதுகாப்பு வழித்தடத்தையும் உள்ளடக்கியது.
- அனைத்து கிராமங்களுக்கும் 4G அலைவரிசை தொடர்பை நோக்கமாகக் கொண்டது.
- 17,000 கி.மீ தொலைவில் வாயு குழாய் வலைப்பின்னல்
- 2 லட்சம் கி.மீ தொலைவுக்கு தேசிய நெடுஞ்சாலை விரிவாக்குதல்
- 200 புதிய விமான நிலையங்கள், ஹெலிபோர்ட்ஸ் மற்றும் ஏரோட்ரோன்கள்
- 200 அடுக்குகளை கொண்ட தெளிவான பார்வைத் திறனுடைய புவியியல் தரவு அமைப்பினை (GIS) நிறுவுதல்

**கதி சக்தி டிஜிட்டல் தளம்** 1

- அனைத்து செயல்பாடுகளுக்கான தளம்
- சிறப்பான திட்டமிடல் மற்றும் துரித நடைமுறை-பல்வேறு அமைச்சகங்கள் / துறைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு

**நிறுவன கட்டமைப்பு** 2

- நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வையிடல் மற்றும் செயல்பாட்டு சுழற்சிக்கு துணை செய்தல்
- 3 அடுக்கு செயல்பாடுகளைக் கொண்டது.
- EGO's – அதிகாரம் பெற்ற தலைமைக் குழுமம்
- NPG - திட்டமிடுதலுக்கான வலைப்பின்னல் குழு
- TSU - தொழில்நுட்பத் துணை அலகு

**ஒருங்கிணைந்த அணுகுமுறை** 1

- அமைச்சகங்களுடன் தொடர்புடைய 16 உட்கட்டமைப்புகளை ஒருங்கிணைத்தல்
- நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பிரச்சினைகளை களைதல்
- உட்கட்டமைப்புத் திறனை முறையாக பயன்படுத்துதல்

**முடிவுரை**

- சரியான திசையை நோக்கிய அடியாகக் கருதப்படுகிறது.
- இது நிலையான மற்றும் தவிர்க்கமுடியாத நிறுவன கட்டமைப்பாகும்.

**6) சுதந்திரத்திற்கு முந்தைய காலகட்டத்தில் குறிப்பாக பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் குடிமைப் பணிகளின் விரிவாக்கத்திற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆராய்க.**

**குடிமைப்பணியின் தொடக்கம்** 1

- குடிமை சேவைகள் மற்றும் குடிமை சேவை அமைப் என்ற சொல்லானது 17ஆம் நூற்றாண்டிலேயே இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது கிழக்கிந்திய கம்பெனியின் வணிக நடவடிக்கைகளை மேற்பார்வையிட அமைக்கப்பட்டது

**வாரன் ஹேஸ்டிங்ஸ் பங்கு** 1

- 1772ஆம் ஆண்டு வாரன் ஹேஸ்டிங்ஸ் குடிமை சேவைகளுக்கான அடிக்கல்லை நாட்டினார்.
- நிதி திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாவட்ட நீதிபதிக்கான அலுவலகத்தை நிறுவினார்.

**லார்ட் காரன்வாலிஸ்-இன் பங்கு** 1

- இந்தியாவில் குடிமைப்படிகளை நவீனப்படுத்தி ஒரு சிறந்த கட்டமைப்பினை உருவாக்கினார்.
- இந்தியாவில் குடிமைப் பணிகளின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
- நிர்வாக மற்றும் நீதி அமைப்புகளை பிரித்தார்.
- மக்கள் நீதிமன்றங்களை நிறுவி பொது மற்றும் தனியார் வணிகப் போக்கை ஒழித்தார்.
- காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தை நிறுவினார்.
- குடிமைச் சேவைகளில் உட்பிரிவுகளை உருவாக்கினார்.
- உடன்படிக்கை செய்யப்பட்ட குடிமைப்பணி : உயர் பதவிகளில் இருக்கும் ஐரோப்பியர்கள்
- உடன்படிக்கை செய்யப்படாத குடிமைப்பணி : இந்தியர்களைக் கொண்டிருக்கும் கீழ்நிலைப்பணிகள்

**வெல்லஸ்லி பிரபுவின் பங்கு** 1

- ரயில்வே குடிமைப் பணியாளர்களுக்காக கல்கத்தாவில் வில்லியம் கோட்டையை கட்டினார்.
- கிழக்கிந்திய கம்பெனியின் ஆணைக்கிணங்க இது ஹெய்லிபெரி கல்லூரி என்று அழைக்கப்படுகிறது.
- மாநிலத்தின் தலைமைச் செயலாளர் அலுவலகத்தை நிறுவினார்.

**பட்டயச் சட்டம் 1833** 1

- குடிமைப் பணியாளர்களின் தேர்வுமுறை அடிப்படையில் ஒரு திறந்தநிலை போட்டித்தன்மையை அறிமுகப்படுத்தியது.
- பதவி மற்றும் வேலைவாய்ப்புகளை இந்தியர்கள் பெறுவதை தடைசெய்யும் நடைமுறையினை எதிர்க்கிறது.

**பட்டயச் சட்டம் 1853** 1

- ஒரு திறந்தநிலை போட்டித் தன்மையினை குடிமைப் பணியாளர்கள் தேர்வு மற்றும் பணியமர்த்தும்முறைகளில் அறிமுகப்படுத்துகிறது.

**மெக்காலே அறிக்கை** 1

- தகுதி அடிப்படையிலான குடிமைச் சேவைகளை வழங்குகிறது.
- திறந்தநிலை போட்டித் தேர்வு நடத்தி இந்தியர்களும் குடிமைப் பணிகள் பெறும்படியான கட்டமைப்பு.
- தேர்வானது லண்டனில் மட்டுமே நடத்தப்பட்டது.

**இந்திய குடிமைப் பணிகள் சட்டம் 1861** 1

- உடன்படிக்கை செய்யப்பட்ட குடிமைப்பணியானது ஒதுக்கீட்டின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது.
- தேர்வுக்கான பாரம்பரிய மொழியாக கிரீக் மற்றும் லத்தீன் திகழ்கிறது.

**சட்டரீதியான குடிமைப் பணிகள் சட்டம் 1878** 1

- இந்தியர்கள் தேர்வில் கலந்துகொள்வதை தவிர்க்க, தகுதிக்கான வயதானது 21லிருந்து 19ஆகக் குறைக்கப்பட்டது.
- கவர்னர் ஜெனரல் பரிந்துரையின்பேரில், ஆறில் ஒரு பங்கு வேலையானது உள்ளாட்சி அரசிலிருந்து நிரப்பப்படுகிறது.

**அட்டிசன் ஆணையம் (1886)** 1

- சட்டரீதியான குடிமைப் பணிகளின் ரத்தினைப் பரிந்துரைக்கிறது.
- 3 அடுக்குமுறைக்கு பதிலாக 2 அடுக்கு முறையினை பரிந்துரைக்கிறது.
- ஒரே நேரத்தில் தேர்வினை இங்கிலாந்திலும், இந்தியாவிலும் நடத்துவதை தவிர்க்கிறது.

**இஸ்லிங்டன் ஆணையம் (1912)** 1

- குடிமைப் பணிகளுக்கான உயர் பதவியில் 25% இடஒதுக்கீடு பரிந்துரைக்கிறது.
- லண்டனிலும், இந்தியாவிலும் ஒரே நேரத்தில் தேர்வு நடத்த உள்ள தடையை ரத்து செய்கிறது.

**லீ - ஆணையம் (1923)** 1

- குடிமைப்பணிகளில் இந்தியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்
- 40% பிரிட்டிஷ், 40% இந்தியர்கள், 20% மாகாண அதிகாரம்

**7) அனைத்து இந்தியப் பணிகளுக்கு மிகவும் வலுவூட்டும் காரணிகளாக நீவிர் அறிவது யாது?**

**அனைத்திந்திய சேவைகள்** 1

- இது குடிமைப்பணிகளின் ஒரு பகுதி ஆகும்.
- நாட்டின் நிரந்தர அதிகார வர்க்கமாக விளங்குகிறது.
- இந்திய நிர்வாக கட்டமைப்பிற்கு முதுகெலும்பாக திகழ்கிறது.

**அனைத்திந்திய பணிகளின் பங்கு** 1

- இந்தியாவின் முன்னேற்றத்திலும், சமூக நலனிலும் முக்கியப் பங்காற்றுகிறது.
- கீழ்நிலையில் உள்ள பிரச்சினைகளை அறிதல்
